ELOP : 47/2023

நாள் : 29.08.2024

ம.சா. :1

பெயர் : தனலெட்சுமி

9ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

2022 ல் நடந்த நகர்புற உள்ளாட்சி தேர்தலில் நானும் போட்டியிட்டேனா என்றால் ஆமாம். வேப்புமனு பரிசீலனையின் போது நான் ஆஜராகி இருந்தேனா என்றால் ஆஜராகி இருந்தேன். நான் எழுத்துபூர்வமான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரி. வாய்மொழி ஆட்சேபணை தெரிவித்தேன். வேட்புமனுவுடன் தாக்கல் செய்யக்கூடிய பிரமாண பத்திரத்தில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாடகைக்கு கடை நடத்தினாரா என்பது குறித்த குறிப்பு எதுவும் குறிப்பிட வேண்டி காலம் எதுவும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் தேர்தல் அதிகாரியிடம் எழுத்துபூர்வமான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரி. வாய்மொழி ஆட்சேபணை தெரிவித்தேன். 2ம் எதிர்மனுதாரர் மட்டும் பரிசீலனை காலம் முடிந்த அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பிறகு ஆட்சேபணை தெரிவித்தார் என்றாலும் அதற்குரிய விளக்கம் தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 9ம் எதிர்மனுதாரர் உரிய முறையில் வேட்புமனுக்களை பரிசீலனை செய்து தகுதியான நபர்களின் வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்டு முறையாக விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்தல் நடத்தியுள்ளார் என்றால் சரியல்ல. 9ம் எதிர்மனுதாரர் ஒருதலைப்பட்சமாக நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.